செய்தி வெளியீடு எண்: 576 நாள்:06.09.2019

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழக மக்களுக்கு (சென்னை நீங்கலாக) வழங்கப்படும் குடிநீர் கடைகோடி கிராமங்கள் வரை சென்றடையும் வகையில் ஒப்பந்தகாரர்களுக்கு இந்த ஆண்டு வழங்க உள்ள ஒப்பந்தங்களில் கிடுக்குப்பிடி.**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 556 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 9 மாநகராட்சிகள் 66 நகராட்சிகள் 347 பேரூராட்சிகள் மற்றும் 48948 கிராம குடியிருப்புகள் மற்றும் 4.23 கோடி மக்கள் தொகை பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை தவிர இதர பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 1825 மில்லியன் லிட்டர் விநியோகித்து வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழக மக்களுக்கு குடிநீர் வழங்க ஒவ்வொரு ஆண்டும் குடிநீர் திட்டங்களுக்கான வருடாந்திர மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு அதன்அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தமிழக மக்களுக்கு ( சென்னை நீங்கலாக ) பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் அந்தந்த திட்டங்களுக்குரிய கடைகோடி கிராம மக்களுக்கு சரியாக சென்றடையவில்லை என்ற புகார்கள் வந்த வண்ணம் இருப்பதினால் கடைகோடி கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற உன்னத அடிப்படையில் இந்த ஆண்டு குடிநீர் பராமரிப்பு திட்டங்களுக்கான ஒப்பந்த முறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருடாந்திர பராமரிப்பு மதிப்பீட்டில் உள்ள வெளி நபர் ஒப்பந்த அடிப்படையிலான மதிப்பீடுகள் (Out sourcing estimate) வாரிய பொறியாளர்களின் ஒப்புதல் தன்மைக்கேற்ப ஒப்புதலின் படியும் தொழில்நுட்ப வசதிகளுக்கேற்றபடியும் பராமரிப்பு பணிகளின் எல்லைக்கேற்றவாறும் அனைத்து கிராம கடைகோடி குடியிருப்புகளுக்கும் உரிய குடிநீர் வழங்க வழிவகை செய்வதற்கேற்றவாறும் தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும். வாரிய நடவடிக்கை எண்–5 நாள் 22.8.2018–ன்படி பணியாட்கள் தேவை எண்ணிக்கைக்கு ஏற்ப மட்டுமே வெளி நபர் பராமரிப்பு பணிகளுக்கான மதிப்பீடுகள் ஒப்புதல் வழங்கப்படும்.

ஒப்பந்தகாரர்கள் தான் பணி அமர்த்தும் பணியாளர்களுக்கு பணியாளர் காப்பீடு (ESI) பணியாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) செலுத்த வேண்டும். ஒப்பந்தகாரர்கள் தான் பராமரிக்கும் திட்டத்தில் முறையாக குடிநீர் மாதிரிகளை சேகரித்து குடிநீர் பரிசோதனை செய்து குடிநீரினை உரிய தரத்துடன் வழங்கப்படவேண்டும்.

மேலும் திட்டத்தில் உள்ள அனைத்து கடைகோடி கிராம குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க கீழ்காணும் பணப்பட்டுவாடா முறைகளை கட்டாயம் பின்பற்றப்படவேண்டும் என

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் சி.நா. மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

- தலைமையிடம் / சுத்திகரிப்பு நிலையத்தில் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவு (கடத்துதல் நீரிழப்பு உட்பட) நீருந்தல்:– 20% ஒப்பந்தத்தொகை வழங்கப்படும்.
- நிர்ணயிக்கப்பட்ட பராமரிப்பு பணியாளர்களை நியமித்திருப்பின் 20% ஒப்பந்தத்தொகை வழங்கப்படும். தவறும் பட்சத்தில் எத்தனை பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதோ அதற்குரிய தொகை மட்டுமே வழங்கப்படும்.
- நிர்வாகப்பொறியாளரால் தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப கட்ட நிலை குடியிருப்புகளுக்குரிய நிர்ணயிக்கப்பட்ட அளவு குடிநீர் விநியோகம் செய்திருப்பின் 20% ஒப்பந்தத்தொகை வழங்கப்படும்.
- நிர்வாகப்பொறியாளரால் தெரிவு செய்யப்பட்ட இடைப்பட்ட நிலை குடியிருப்புகளுக்குரிய நிர்ணயிக்கப்பட்ட அளவு குடிநீர் விநியோகம் செய்திருப்பின் 20% ஒப்பந்தத்தொகை வழங்கப்படும்.
- நிர்வாகப்பொறியாளரால் தெரிவு செய்யப்பட்ட கடை கோடி நிலை குடியிருப்புகளுக்குரிய நிர்ணயிக்கப்பட்ட அளவு குடிநீர் விநியோகம் செய்திருப்பின் 20% ஒப்பந்தத்தொகை வழங்கப்படும்.
- நிர்வாகப்பொறியாளரால் நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் அளவை விட குறைவாக வழங்கப்பட்டிருப்பின் வழங்கப்பட்ட/வழங்கப்படவேண்டிய அளவின் அடிப்படையில் 90% சதவீத ஒப்பந்தத்தொகை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி பணி செய்ய ஒப்பந்தகாரர்களுக்கும் மேற்கொள்ளப்படும் பணிகளை தரம் மற்றும் அளவுகளை உறுதிபடுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப்பொறியார்களுக்கும் தகுந்த சுற்றிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் சி.நா. மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக திட்டத்தின்படி பெற வேண்டிய குடிநீர் எங்காவது வரவில்லை என்றாலோ அல்லது பகிர்மான குழாய்களில் கசிவோ அல்லது உடைப்போ ஏற்பட்டாலும் மற்றும் குடிநீரின் தரம் குறித்து சந்தேகம் இருந்தாலும் அருகில் உள்ள அந்த மாவட்டத்திற்குட்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர்களிடம் உடனடியாக தகவல் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**